# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2017 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

ஒட்டுமொத்த வினாப் பத்திரமும் மட்டம் 1 இற்குக் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடப்பரப்பில் பெரும்பாலானவற்றை உள்ளடக்கியிருந்ததுடன், பாடப் பரப்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள ஒட்டுமொத்த அறிவையும் விளக்கத்தையும் சோதிக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தது. மொத்தத்தில், பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருந்த அதே வேளை ஏனையோர் நன்றாக விடையளிப்பதற்குத் தவறியிருந்தனர். எவ்வாறு பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்திற்கு விடையளித்துள்ளனர் என அவதானிக்கையில், போதுமானளவு புள்ளிகளைப் பெறுவதற்காக வினாக்களை விளங்கிக் கொண்டு விடையளிக்கும்போது தவறுகளைத் தவிர்ப்பதற்கு பின்வரும் முக்கிய விடயங்கள் கண்டறியப் பட்டிருக்கின்றன. பரீட்சகரின் அறிக்கையினது பிரதான நோக்கம், குறைந்தளவு புள்ளிகள் பெறப்பட்ட பாடப்பரப்புகளில் கவனஞ்செலுத்தி எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவுவதாகும்.

## <u>பகுதி A</u>

### வினா இல. 01

இப்பகுதியின் மூலம், வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் ஒட்டுமொத்த பரப்பும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். மொத்தமாகவுள்ள 100 புள்ளிகளில் இவ்வினாவுக்கு 40 புள்ளிகள் ஒதுக்கப் பட்டிருந்ததுடன் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் உயர்ந்தளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பின்வரும் வினாக்களுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை என்பதுடன் பகுதி A தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன:

**1.4** இங்கு ‘‘வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள்’’ தொடர்பான சரியான விளக்கத்தை அளவிட எதிர்பார்க்கப்பட்டது.

பெரும்பாலானவர்கள் 2 ஆம் இலக்க விடைக்குப் பதிலாக 4 ஆம் இலக்க விடையினைத் தெரிவுசெய்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளாது விடையளிக்கையில் ‘‘வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி’’ எனத் தவறாக வழிப்படுத்தப்பட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவில் ‘‘தவறான விடை’’ எதுவெனக் கேட்கப்பட்டதை விங்கிக்கொள்ளவில்லை. இது அவர்கள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் தொடர்பான தவறான கூற்றை தெரிவுசெய்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

**1.5** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்டிருந்த தெரிவுகளிலிருந்து ஊழியர்களின் பேரம்பேசும் பலம் என்ற ‘‘போட்டரின் ஐந்து படை மாதிரி’’யின் ஓர் அங்கமாக அமையாத விடயத்தைச் சரியாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**1.11** சந்தைப்படுத்தல் தத்துவத்துடன் தொடர்புடைய தந்திரோபாயத்தைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விளங்கிக்கொண்டிருக்கவில்லை. எனவே பரீட்சார்த்திகள் சந்தைப்படுத்தல் தத்துவத்தின் தந்திரோபாயங்கள் பற்றி தெளிவானதும் தீர்மானம் மிக்கதுமான அறிவைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும்.

இல. **1.1** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் வினாவுக்குரிய விடையின் இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழுமையான விடையை எழுதியிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**1.17** மொத்தத் தொக்குக் கிரயத்தை இழிநிலைப்படுத்துகின்ற உத்தமக் கட்டளை அளவான ''சிக்கனக் கட்டளைக் கணியத்திற்குப்'' பதிலாக குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் பிழையான விடையான ''உரிய நேரத் தொக்கு'' என்பதைத் தெரிவுசெய்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**1.18** போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள முதன்மைச் செயற்பாடுகள் மற்றும் ஆதரவுச் செயற்பாடுகள் பற்றிய தெளிவானதும் தீர்மானம் மிக்கதுமான அறிவு சில பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் தவறான விடையையே தெரிவுசெய்திருந்தனர். சரியான விடையான ''மனித வள முகாமை'' என்னும் ஆதரவுச் செயற்பாட்டிற்குப் பதிலாக ''சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை'' தெரிவுசெய்யப் பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றம் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மாதிரிகள் மற்றும் வேலைச்சட்டகங்கள் ஆகியவை பற்றியும் அவற்றுடன் சேர்த்து அவற்றின் பிரிவுகள் மற்றும் உப பகுதிகள் ஆகியவை பற்றியும் விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**1.19** சில பரீட்சார்த்திகள், தரவுக்கும் தகவலுக்குமிடையேயான வேறுபாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. அத்தகைய பரீட்சார்த்திகள் சூழல் அல்லது நிறுவனம் பற்றிய மூல விடயங்கள் மற்றும் இலக்கங்கள் ''தகவல்'' என அழைக்கப்படுகிறது என்ற தவறான விடையைத் தெரிவுசெய்திருந்தனர்.

எனவே பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான தங்களுடைய அறிவை மேம்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். மேற்படி வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித் திருந்தனர். முதலாவது வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

## <u>பகுதி B</u>

இப்பகுதி 40 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவும் 10 புள்ளிகளைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

இவ்வினா வியாபார நிறுவனங்கள் மற்றும் ஆதரவுச் சேவைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**பகுதி – (a)** இங்கு பங்குடமைக்கும் பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கும் இடையேயான வேறுபாடு சோதிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள்

இரண்டு அல்லது மூன்று வேறுபாடுகளை மாத்திரமே எழுதியிருந்தனர். கேட்கப்பட்டதற்கிணங்க, பரீட்சார்த்திகள் பங்குடமைக்கும் பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதியிருந்தபோதிலும், அவர்களில் சிலர் தனியுடைமை எதிர் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பான விடயங்களை எழுதியிருந்தனர். எனவே, விடையளிப்பதற்கு முன் வினாவை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமானதாகும். வினாவில் தெளிவாக ***"கூறுக"*** என அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் விடையை விவரமாக விபரித்து எழுதி தமது நேரத்தை தேவையற்ற விதத்தில் வீணடித்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**பகுதி – (b)** வியாபார நிறுவனம் ஒன்றுக்கு ஒரு நல்ல போக்குவரத்து முறைமையின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இவ்வினா ஓரளவு இலகுவானதாக இருந்ததுடன் ஆதரவுச் செயற்பாடுகள் பற்றிய சரியான புரிந்துணர்வை அளவிட எதிர்பார்த்தது. பெரும்பாலான விடைகள் திருப்திகரமானதாக அமைந்திருந்தன. சில பரீட்சார்த்திகள் போக்குவரத்து முறைமை பற்றிய நடைமுறை அறிவு காரணமாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வியாபார நிறுவனம் ஒன்றுக்கு ஒரு நல்ல போக்குவரத்து முறைமையின் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் போக்குவரத்துப் பற்றி விபரித்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## வினா இல. 03

இங்கு தகவல் முகாமைத்துவம் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் ஆகியன பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைச் சோதிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி – (a)** தகவல் முகாமைத்துவத்திற்கு ஒரு தொழினுட்பம்சார் முறைமையைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களைப் பட்டியலிடுமாறு கோரப்பட்டது. தகவல் முகாமைத்துவத்திற்கான தொழினுட்ப முறை தொடர்பான நடைமுறை அறிவு காரணமாக பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு இலகுவாக விடையளித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வினாவில் அனுகூலங்களைப் பட்டியலிடுமாறு கூறப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் அனுகூலங்களை விபரித்திருந்தனர்.

**பகுதி – (b)** இப்பகுதி இலத்திரனியல் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இலத்திரனியல் வர்த்தகம் பற்றிய எண்ணக்கருவை நன்றாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் இலத்திரனியல் தொடர்பாடலின் சிறப்பியல்புகளை அல்லது முறைகளை எழுதியிருந்தனர். அவர்களில் மிகச் சிலரே சரியான விடைகளை வழங்கியிருந்தனர். விடையளிப்பதற்கு முன் வினாவின் மூலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்வது முக்கியமானதாகும். வியாபார நிறுவனமொன்றுக்கு எவ்வாறு இலத்திரனியல் வர்த்தகம் உதவிபுரிகிறது என்பதை விபரிக்குமாறு கேட்கும்போது அங்கு ஒரு வியாபாரத்திற்கு இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரயோசனத்தன்மையை விபரிப்பது தேவைப்படுத்தப்படுகிறது. வியாபார நிறுவனங்களுடன் தொடர்புடைய தொழினுட்பவியல்கள் தொடர்பான தமது அறிவினைப் பரீட்சார்த்திகள் மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது.

## வினா இல. 04

இவ்வினா மனித வள முகாமைத்துவத்தின் ஆட்சேர்ப்புச் செயன்முறை மற்றும் பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது. குறிப்பிடத்தக்க அளவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி – (a)** இங்கு முறைமைசார் ஆட்சேர்ப்புச் செயன்முறை ஒன்றுடன் தொடர்புடைய படிமுறைகளை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள், முறைமைசார் ஆட்சேர்ப்புச் செயன்முறையைச் சரியான படிமுறை ஒழுங்கில் எழுதியிருக்கவில்லை. கணிசமானளவு பரீட்சார்த்திகள் ஆட்சேர்ப்புச் செயன்முறைக்குப் பதிலாக மனித வள முகாமைத்துவத்தின் வேறு தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர். இது அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ள வில்லை என்பதையே வெளிக்காட்டுகிறது.

**பகுதி – (b)** இப்பகுதி ஊழியர்களின் விளைதிறன்மிக்க பயிற்சியை அடிப்படையாகக் கொண்டி ருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் ஊழியர்களின் விளைதிறன்மிக்க பயிற்சியிலிருந்து நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கலந்துரையாட வில்லை. எனவே, இதன் விளைவாக அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குக் குறைந்தளவு புள்ளிகளையே பெறக்கூடியதாக இருந்தது. இப்பகுதிக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் தங்களது பொது அறிவைக் கொண்டு தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் பாடத் தொகுதியைக் கற்பதன் மூலம் ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## வினா இல. 05

இங்கு சந்தைப்படுத்தல் தொடர்பிலான பரீட்சார்த்திகளின் அறிவைச் சோதிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான வகையில் விடையளித்திருந்தனர்.

**பகுதி – (a)** இப்பகுதி வணிகக் குறியிடலின் அனுகூலங்களைச் சோதித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தங்களது பொது அறிவைக் கொண்டு இவ்வினாவுக்கு விடையளித் திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வணிகக் குறியிடலின் அனுகூலங்களைக் குறிப்பிடு வதற்குப் பதிலாக விளம்பரப்படுத்தலின் அனுகூலங்களைக் குறிப்பிட்டிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் சந்தைப்படுத்தலில் வணிகக் குறியிடலின் வகிபாகம் பற்றி முற்றுமுழுதான அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**பகுதி – (b)** இப்பகுதி சந்தைப்படுத்தலிலுள்ள பதங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

(i) அதிகளவான பரீட்சார்த்திகள் பொருள் / சந்தை வழங்கல் என்னும் பதத்தை உதாரணங்களுடன் விபரித்திருந்தனர் ஆயினும் அவர்களில் சிலர் பொருள் என்பதற்குப் பதிலாக உற்பத்தி பற்றி விபரித்திருந்தனர்.

(ii) இலக்குச் சந்தைப்படுத்தல் என்னும் பதத்தை விபரிப்பதற்குத் தவறியிருந்ததன் காரணமாக குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு குறைந்த அளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகள் இலக்குச் சந்தைப்படுத்தல் என்பதற்குப் பதிலாக சந்தைப்படுத்தல் என்னும் பதத்தை விபரித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாக ஆழமான அறிவினைக் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களுக்கிடையேயான வேறுபாடுகளை யும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி C

### வினா இல. 06

இது **வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனி** தொடர்பான விவரண அடிப்படையிலமைந்த ஒரு வினாவாக அமைந்திருந்ததுடன் இங்கு தொழிற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினாவை அதிகளவான பரீட்சார்த்திகள் நன்கு வாசிக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**பகுதி – (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் நடைமுறைப் பின்புலத்தின் மீது தரப்பட்ட விவரணத் துடன் தொடர்புபடுத்த வேண்டிய விடயங்களைத் தவிர்த்து SWOT பகுப்பாய்வினை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தைத் தவிர்த்து SWOT என்பதாற் கருதப்படுவது யாது என விபரித்திருந்ததுடன் பொதுவான வியாபாரச் சூழ்நிலையிலிருந்து உதாரணங்களையும் வழங்கியிருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனிக்குப்** பொருத்தமான வகையில் SWOT பகுப்பாய்வை விபரிப்பதற்குத் தவறியிருந்தனர்.

**பகுதி – (b)** இவ்வினா **வரையறுக்கப்பட்ட மரியோ பிஸ்கட் கம்பனியின்** தொழிற்பாட்டு முகாமை யாளரது வகிபாகம் பற்றிய அறிவை சோதிக்க எதிர்பார்த்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாததுடன் எதிர்பார்க்கப்பட்ட விடையினையும் வழங்கியிருக்கவில்லை. அவர்கள் தொழிற்பாட்டு முகாமையாளரது வகிபாகத்தை விபரிப்பதற்குப் பதிலாக உற்பத்தி முகாமையாளரின் வகிபாகத்தை விபரித்திருந்தனர். பரீட்சார்த்திகள் கம்பனியின் உற்பத்தி முகாமையாளரின் வகிபாகத்தைக் காட்டிலும் அதிகளவில் தொழிற்பாட்டு முகாமையாளரின் வகிபாகத்தை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**பகுதி – (c)** இவ்வினா பயனுறுதிமிக்க செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையின் சிறப்பியல்புகள் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறியிருந்தனர். இது மனித வள முகாமைத்துவத்தில் பரீட்சார்த்திகள் குறைந்தளவு அறிவைக் கொண்டிருப்பதையே எடுத்தியம்புகிறது. அவர்களில் பலர் பயனுறுதிமிக்க செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையின் சிறப்பியல்புகளுக்குப் பதிலாக செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையின் நன்மைகளை எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு மனித வள முகாமைத்துவத்தின் கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான அம்சங்கள் மீது தமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.

2. இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

4. பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.

9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக்கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

10. கட்டாய வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

11. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -